# சைனிக் பள்ளி

அமராவதிநகர் - 642 102
உடுமலைப்பேட்டை வட்டம்
திருப்பூர் மாவட்டம்
தொலைபேசி : 04252 256246

(பாதுகாப்பு அமைச்சகமும் தமிழக அரசும் ஒருங்கிணைந்து நடத்தும் பள்ளி) உண்டுறைப்பள்ளி. இந்தியப் பொதுப்பள்ளிக்குழு (IPSC) உறுப்பினர். CBSE மைய உயர் கல்விக் குழுவின் பாடத்திட்டத்தினை கொண்ட இப்பள்ளியில் மாணவர்கள் மட்டுமே சேரமுடியம்.

## சேர்க்கை அறிக்கை வகுப்பு VI மற்றும் IX 2012-2013

அமராவதிநகர் சைனிக் பள்ளியில் 2012-13 ஆம் கல்வியாண்டில் 6 மற்றும் 9 ஆம் வகுப்பில் சேர்வதற்கான அகில இந்திய நுழைவுத்தேர்வு வரும் 08.01.2012 ஞாயிறன்று நடைபெறும். மாணவர்கள் மட்டுமே இப்பள்ளியில் சேர முடியும்.

01.07.2012 அன்று 10 வயது முடிந்தும் 11 வயது முடியாமலும்(02.07.2001 லிருந்து 01.07.2002 தேதிக்குள் பிறந்திருக்க வேண்டும்) இருக்கும் மாணவர்கள் மட்டுமே 6ஆம் வகுப்பில் சேரமுடியும்.

01.07.2012 அன்று 13 வயது முடிந்தும் 14 வயது முடியாமலும் (02.07.1998 லிருந்து 01.07.1999 தேதிக்குள் பிறந்திருக்க வேண்டும்) இருந்து அங்கீகாரம் பெற்றுள்ள பள்ளியில் 8ஆம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மட்டுமே 9 ஆம் வகுப்பில் சேரத்தகுதி உண்டு.

விளக்கக் குறிப்பேடும் விண்ணப்பப் படிவமும் பெற விரும்பினால் பொதுப் பிரிவு மற்றும் படைத்துறைப் பிரிவினைச் சேர்ந்தோர்கள் ₹.550/- க்கும் தாழ்த்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடி வகுப்பினர்கள் ₹.400-- க்கும் (இதில் பதிவுக்கட்டணமும் பழைய வினாத்தாளும் அடங்கும் ) அமராவதிநகர் பாரத ஸ்டேட் வங்கியில் (கிளை எண் 2191) பெறத்தக்க வகையில் முதல்வர், சைனிக்பள்ளி, அமராவதிநகர். என்ற பெயரில் வரைவோலை (DD) எடுத்து அனுப்புதல் வேண்டும். அத்துடன் உங்களின் சுயவிலாசமிட்ட 25X20செமீ உறையுடன் அனுப்பவும். மேலும் எந்த வகுப்பிற்கு (VI அல்லது IX)

அனுமதிக்கப்படவேண்டும் என்பதையும் நீங்கள் எந்தப்பிரிவைச் சேர்ந்தவர் (தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், படைத்துறையினர், பொதுப்பிரிவினர்) என்பதனையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

சைனிக் பள்ளி அமராவதிநகர் இணையதளம் www.sainikschoolamaravathinagar.edu.in) என்ற முகவரியில் நுழைவுத் தேர்வுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவத் தொகையை நுழைவுத்தேர்வு படிவத்தோடு சேர்த்துக்கட்டுவதற்கு இயலும், வகுப்பு VI ல் சேர விரும்புவோர் நுழைவுத் தேர்வு (ஆங்கிலம் மற்றும் தமிழ்) எழுத விரும்பும் மொழியைக் குறிப்பிடுக.

**விண்ணப்பமும் மற்றும் விளக்கக் குறிப்பேடும் 15-10-2011 முதல் 03-12-2011 வரை வழங்கப்படும்.**

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை முதல்வர். சைனிக்பள்ளி அமராவதிநகர் 642102 உடுமலைவட்டம் திருப்பூர் மாவட்டம் என்ற முகவரிக்கு 10.12.2011 தேதிக்குள் அனுப்பதல் வேண்டும்.**

மேலும் விபரங்களுக்கு 04252 256246, 256296 என்ற தெலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு: இப்பள்ளிக்கும் தனியார் பயிற்சி மையங்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. தேர்வுத்தகுதி அடிப்படையிலும். மருத்துவச்சோதனை அடிப்படையிலும் மட்டுமே மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.

முதல்வர்
சைனிக் பள்ளி
அமராவதிநகர்